நாள் 09.08.2024

அசல் வழக்கு எண் 77/2021

வா சா 1 முருகன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் எம்.எஸ்சி.பி.எட் படித்திருககிறேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள். அவர்கள் இருவரில் ஒருவர் படித்து முடித்துவிட்டார் மற்றொரு மகன் படித்து கொண்டிருக்கிறார். 2 வது மகன் எங்கு படித்து கொண்டிருக்கிறார் என்றால் ரெட்டியார் பட்டி பொறியியல் கல்லூரியில் படித்து கொண்டிருக்கிறார். நான் எந்த பள்ளியில் பணிபுரிகிறேன் என்றால் பட்டாதாரி ஆசிரியராக அக்காநாயக்கன் பட்டி கோயில் பட்டி தாலுகாவில் பணிபுரிகிறேன். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கே.டிசி நகரில் குடியிருந்து வருகிறோம். 10 நாளுக்கு முறை முனைஞ்சிபட்டியில் உள்ள எங்கள் வீடடிற்கு வந்து செல்வோம். அந்த வீடு கான்கிரிட் வீடு என்றால் சரிதான். எங்கள் வீட்டில் எத்தனை அறைகள் இருக்கறிது என்றால் 4 அறைகள் இருக்கிறது. அந்த வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை. தனித்தனியாக இருக்கிறது. தாவா சொத்து தெருவிற்கு அந்தபக்கம் இருக்கிறது. நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு கழிப்பறை இருக்கிறது என்றால் சரிதான். அந்த கழிப்பறை நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு உள் தான் இருக்கிறது என்றால் சரிதான். எனது அப்பா சண்முககோனாருக்கு எழுதபடிக்க தெரியும் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பூர்வீகமாக நஞ்சை, நிலங்களும் புஞ்சை நிலங்களும் உள்ளது எனறால சரிதான் எனது அப்பா சிறு வயதிலிருந்து விவசாம் செய்தார் என்றால் சரிதான். ஆடு மாடு வியாபாரமும் உண்டு என்றால் ஆடு வளர்க்கவில்லை காளைமாடு மட்டும வியாபாரம்

செய்வார்கள். என்னை எனது அப்பா தான் படிக்க வைத்தார் என்றால் 8ம் வகுப்பு வரை எனது அம்மா தாத்தா வீட்டில் படித்தேன். அதன்பிறகு 9ம் வகுப்பிலிருந்து எனது அப்பா படிக்க வைத்தார். நான் ஒரே மகன் தான். எனது அம்மா வேறு எங்கும் வேலை பார்க்கவில்லை என்றால் வீட்டில் உள்ள 6 ஏக்கர் தோட்டத்தில் வேலை பார்த்தார்கள். எனது அம்மாவிற்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் தோட்டத்தில் உள்ள வருமானம் தான். எனது அம்மா பெயரில் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பா வாங்கியது என்று சொன்னால் இல்லை. எனது அம்மாவின் 30 பவுன் நகைகளை வைத்து எனது அம்மா அவர்கள் பெயரில் 3 ஏக்கர் வாங்கியிருந்தார்கள். அதில் பாதி விற்றிருக்கிறார்கள். அதில் 1 1/4 ஏக்கர் இன்னும் எனது அம்மா பெயரில் இருக்கிறது. எனது அம்மா உயிருடன் இருக்கும்போதே நிறைய சொத்துக்களை விற்பனை செய்திருக்கிறார் என்றால் அத்தியாவசிய தேவைக்காக தான் விற்றிருக்கிறார். ஒவ்வொரு தங்கைக்கும் 30 பவுன் நகை போட்டுஇருக்கிறார். எனது அப்பா பெண் பிள்ளைகளுக்கும் ஏற்பாடு ஆவணம் எழுதி வைத்திருக்கிறார் என்று சொன்னால் சரிதான். வழக்கு பிரதிவாதிக்கு அதிகமாக எழுதி கொடுத்திருக்கிறார். பிரதிவாதி அப்பாவை அழைத்து சென்று எழுதி இருக்கிறார். பிரதிவாதி கணவர் சாடசிகையெழுதது போட்டுஇருக்கிறார். வழக்கு பிரதிவாதி ஒரு மாற்றுதிறனாளி என்றால சரிதான். ஒரு கை ஊனம். எனது அப்பா ஏற்படுத்திய கிரைய ஆவணங்களையோ ஏற்பாடு ஆவணங்களையோ நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் ஆட்சேபிக்கவில்லை. ஏற்பாடு ஆவணம் உடனே தெரியவில்லை. 3 வருடம் கழித்து தான் எனக்கு தெரிந்தது. தாவா சொத்துக்களை எனது அப்பா தான் தபசில் 2 சொத்துக்களையும் 1972 ல் கிரையம் வாங்கியிருக்கிறார்

என்றால் சரிதான். ஒரே பத்திரமாக தான் 10 1/2 செண்டையும் வாங்கியிருக்கிறார். அதில வழக்கில் உள்ள 2 ம் தபசில் சொத்தை 22.06.2007 ல் எனது அப்பா நன்கொடை ஆவணமாக பிரதிவாதிக்கு கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் குடியிருப்பு மனை 3 1/2 செண்டை ஒரு பத்திரத்திலும் 2013 ல் 1 1/2 செண்ட் இடத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலமும் கொடுத்திருக்கிறார். 1ம் தபசிலாக காண்பித்துள்ள சொத்தை 02.11.2018 ல் எனது அப்பா கடம்பன்குளத்தை சார்ந்த சங்கர் என்பவருக்கு கிரையமாக கொடுத்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. சங்கரிடமிருந்து பிரதிவாதி மூலைக்கரைப்பட்டி சார்பதிவக எண்.964/19 மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. 1, 2 தபசில் சொத்துக்களை பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் மூலமும் ஏற்பாடு ஆவண கிரைய பத்திரங்கள் மூலமும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் கிரைய பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அப்பாவை வழக்கை வாபஸ்பெற வைத்து பத்திரம் போட்டுஇருக்கிறார்கள். 1, 2 தபசில் சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில்இருக்கிறது என்றால் இல்லை. தென்பகுதியில் உள்ள கழிவறை கட்டியுள்ள இடத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் குடியிருந்து வீட்டிற்கு நேர் எதிரே மேல்புறம் யார் வீடு இருக்கிறது என்றால் சுடலைக்கண்ணு வீடு இருக்கிறது சுடலைக்கண்ணு வீட்டிற்கு தென்புறம் யார் வீடு இருக்கிறது என்றால் தங்கை பிரதிவாதி வீடு இருக்கிறது. பிரதிவாதியின் வீடு வீட்டை உள்ளடக்கி காம்பவுண்ட் சுவர் இருக்கிறது என்றால் சரிதான். 10 1/2 செண்ட்டிற்கும் முழுமையாக காம்பவுண்ட் சுவர் இருக்கிறது. அது எனது அப்பா கட்டிய சுவர் ஆகும். காம்பவுன்ட் சுவர் வடமேற்கு மூலையில் ஒரு கழிப்பறை இருந்து

அது சேதமடைந்த நிலையில் உள்ளது என்றால் இல்லை. கழிப்பறைக்கு நேர் வடபுறம் யார் இடம் இருக்கிறது என்றால் சுடலைமுத்து மகன் சிவன் இடம் இருக்கிறது. கழிப்பறைக்கு கீழ் பக்கம் பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரிதான். அது காலிமனையாக இருக்கிறது. வடக்குபக்கம் பனங்கட்டை வைத்து ஓடு வைத்திருக்கிறார்கள். கழிப்பறைக்கு முன்பாக உள்ள காலிமனையை பிரதிவாதி தான் எரிக்குழி வைத்து அனுபவிக்கிறார் என்றால் இல்லை. காம்பவுணட் சுவற்றின் தென்மேற்கு மூலையில் பிரதிவாதி வைக்கோற்படப்பு வைத்து அனுபவிக்கிறார் என்றால் நான் புலங்கி வந்த இடத்திற்குள் உள்ளே நுழைந்து அவர்கள் சாணி உரம் போட்டு வைக்கோற்படப்பு வைத்து அவர்கள் தான் பிரச்சினை செய்கிறார்கள். நான் பிரச்சனை செய்யவில்லை. கழிப்பறைக்கு மிக அருகில் பப்பாளி மரம், முருங்கை மரம், தென்னை மரம் வைத்து பிரதிவாதி பராமரித்து வருகிறார் என்றால் எனது அப்பா இருக்கும்போது எனது அப்பா தான் கழிப்பறை உள்ள இடத்தை என்னை புலங்க சொன்னாகள் அதன்படி தான் நான் கழிபபறை கட்டி வைத்திருக்கிறேன். அந்த இடத்தில் இருக்கும் ஆழ்துளாய் கிணறை எனது தங்கைக்கு கொடுத்துவிட்டு எனக்கு என்னுடைய வீட்டில் தனியாக போர் போடசொன்னார்கள். எனது அப்பா, அம்மா மற்றும் பிரதிவாதி தாவா இடத்தில் உள்ள வீடடில் தான் வசித்தாகள் என்றால் எனது அம்மாவும், அப்பாவும் பூர்வீக வீட்டில் இருந்தார்கள். அம்மா காலம் சென்றபிறகு எனது அப்பா எனது தங்கையுடன் சென்றுவிட்டார்கள். பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டில் வைத்து தான் எனது தாயார் இறந்தார் என்றால் மருத்துவமனையில் வைத்து இறந்தார். நான் வழக்கில் எனது மனைவியின் வங்கி கணக்கிற்கு தாவா இடத்தில் உள்ள கழிப்பறை கட்டுவதற்கு பணம் வந்ததாக

சொல்வது தவறு என்றும், நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு கழிப்பறை கட்டுவதற்கு தான் எனது மனைவியின் வங்கி கணக்கில் பணம் வந்தது என்று சொன்னால் அது தவறு. தாவா சொத்து உங்கள் மனைவி பெயரில் இருந்தால் மட்டும் தான் மனைவியின் வங்கி கணக்கிற்கு கழிப்பறை கட்டுவதற்கு பணம் வரமுடியும் என்று சொன்னால் அது தவறு. தாவா இடத்தை காண்பித்து தான் பணம் வாங்கினோம். தாவா இடம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா சொன்ன சத்தியவாக்கு தான் இருக்கிறது. கழிப்பறை கட்டியுள்ள இடத்திற்கும் எனது மனைவிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் ஆவணம் இல்லை. நம்பிக்கையாக அப்பா தந்தார்கள் அந்த இடத்திற்கு நாங்கள் பணம் வங்கியிலிருந்து பெற்றிருக்கிறோம். எனது மனைவியின் வங்கி கணக்கிற்கு வந்த பணத்திற்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொனனால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தில் பிரதிவாதி கட்டிய கழிப்பறை பயன்பாட்டில் இல்லாமல் முழுதும் சேதமடைந்த நிலையில் இருக்கிறது என்றால் உண்மையல்ல. 1ம் தபசில் கழிப்பறையை நாங்கள் இப்பொழுதும் பயன்படுத்தி வருவதாக கூறியுள்ளது வழக்கிற்கு பொய்யாக சொல்லியுள்ளேன்என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்குஎண்.157/2018 ற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமுாம கிடையாது என்று சொன்னால் சரியல்ல சம்மந்தம் இருக்கிறது. அநந் வழக்கு இவ்வழககு பிரதிவாதியின் சொத்தில் நான் இடையூறு செய்யக்கூடாது என்பது தான் அந்த வழக்கு என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும போது நான் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் வைத்து இந்த வழக்கு சொத்தில் நான் எந்த இடையூறும் செய்யமாட்டேன் என்று கூறியதால் அந்த

வழக்கு திருப்பப்பட்டது என்றால் நான் அவ்வாறு சொல்லவே இல்லை. நான் காவல் நிலையத்தில் இடையுறு செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டு பிரதிவாதியை கஷ்டப்படுத்தும் நோக்கத்துடன் வழககை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எநத் உரிமையும் கிடையாது என்றால் அது தவறு. வழக்கு சொத்தை நான் ஒருபோதும் நான் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.